[2024 ஜூன் 29

(அஆ) சேலம், ஏ.டி.சி. நகர் மற்றும் அருள் நகர், பாலங்கள் அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள் அவர்கள்.*

திரு. இரா. அருள்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம், அழகாபுரம் பெரியபுதூரையும், கோரிமேட்டையும் இணைக்கிற ஏ.டி.சி. நகர் பகுதியில் பாலம் வேண்டுமென்று தொடர்ந்து மூன்றாண்டுகளாகக் கேட்டு வருகின்றேன். அதேமாதிரி, அஸ்தம்பட்டியையும்–அழகாபுரம் பெரியபுதூரையும் இணைக்கும்வகையில் அருள் நகரில் ஒரு பாலம் என இரண்டு பாலங்களும் வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். தயவுசெய்து இரண்டு பாலங்களையும் அமைக்க வேண்டுமென்று அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

(அஇ) நூற்பாலைகள், மானியம் உள்ளிட்ட சலுகைகள் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A.R.R. ரகுராமன் அவர்கள்.*

திரு. A.R.R. ரகுராமன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பல வருடங்களாக, நூற்பாலைகள் பல இலட்சம் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பைக் கொடுத்துக்கொண்டிருந்தன. இப்போது நூற்பாலைகள் கஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. புதியதாக வரும்* Industries*–களுக்கு பல சலுகைகளை நாம் தருகின்றோம். அதனால், இந்த நூற்பாலைகளுக்கும் மானியமாக மின்சாரமோ அல்லது வங்கியில் வட்டியைக் குறைத்தோ, அவர்களுக்கு ஏதாவது சலுகை தர வேண்டுமென்று அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்— தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார் அவர்கள்.*